# <u>காசியும் தமிழகமும் – காலத்திற்கு அப்பாற்பட்ட பிணைப்பு - தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி</u>

நம்முடைய நாட்டின் அரசியலமைப்புச்சட்டம், நம்முடைய நாட்டை 'பாரதம்' என்றே அறிமுகப்படுத்துகிறது. வரலாற்றிலும், புராணங்களிலும், கவிதை - காவியங்களிலும் இப்பெயராலேயே நாம் அறியப்பட்டிருக்கிறோம். பண்டைய இந்திய இலக்கியங்கள், இப்பெயரையே நம்முடைய தேசத் தாய்க்குத் தந்திருக்கின்றன. அன்றாட மரபுவழி சடங்கு சம்பிரதாயங்களில், இப்பெயராலேயே நம் அன்னை போற்றப்படுகிறாள்; வணங்கப்படுகிறாள். தேசிய விடுதலைப் போராட்டத்திலேயும் 'பாரத தேவி' என்றே முதன்மைபெற்றாள். ஆளுகை ஆதிக்கம் பெற்ற ஆட்சியாளர் ஒருவரால்தான் 'நாடு' அல்லது 'ஆட்சிப் பிரதேசம்' உருவாக்கப்படுகிறது, அதுவும், ஆதிக்க அழுத்தத்தாலேயே இவ்வாறு உருவாக்கப்படுகிறது என்று எண்ணுகிற மேற்கத்தியப் பார்வைக்கு , 'பாரதம்' என்னும் நாகரிகத்தின் செழுமையைப் புரிந்து கொள்ள இயலாது. பாரதம் என்பது நாகரிகப் பரிணாமம்; ஒரே வகையான பண்பாட்டு ஆன்மீகத்தால் உருவாகி, ஒருங்கிணைந்து பக்குவப்பட்டு, கால சுழற்சியில் விரிந்து பரந்து மலர்ந்திருக்கும் பரிணாமம். முனிவர்களும், சித்தர்களும், யோகிகளும், கவிஞர்களும், சமுதாய சீர்திருத்தவாதிகளும் இந்தப் பரிணாமத்தையே மேலும் பக்குவப்படுத்தியுள்ளனர். அரசர்கள், ஆண்டாண்டு காலமாக, இந்தப் பண்பாட்டு ஒற்றுமையையும் ஆன்மீக ஆதாரத்தையும் பேணிப் பாதுகாத்துப் பராமரித்துள்ளனர்.

பாரதத்தின் செம்மைமிக்க பரிணாமப் பயணத்தில், தமிழ் கூறும் நல்லுகத்தின் பங்கு மகத்தானது. கடலுக்கு வடக்காக பாரதம் என்னும் நிலப்பரப்பு, தமிழகத்தில்தான் தொடங்குகிறது. தென்கோடித் தமிழகத்தின் புனிதத் தலமான இராமேஸ்வரத்திற்கும், வடபரப்பின் கங்கைக் கரைத் தலமான காசிக்கும் இடையில் ஆயிரக்கணக்கான மக்கள் பயணித்துள்ளனர். காசி-இராமேஸ்வர யாத்திரை என்னும் இப்பயணம், ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் இன்றிமையாத அங்கமாகவே பார்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலேய ஆட்சியாளர்களின் காலம் வரைக்கும் தவறாது நடைபெற்ற இது, அவர்களாலேயே சிதைவுற்றது. வழி நெடுகிலும் இருந்த ஓய்வு மற்றும் பயணக் களைப்பு வசதிகளையும் ஆதுர அமைப்புகளையும் சத்திரங்களையும் தங்களின் வசதிக்காகவும் ஓய்வுக்காகவும் தளவாடங்களுக்காகவும் ஆங்கிலேயர் பயணப்படுத்தியபோது, யாத்திரை தடைப்பட்டது; மெல்ல மெல்லக் குறைந்தும் போனது. 1801ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் நாள், தஞ்சையின் கடைசி அரசரான சரபோஜி மன்னர், அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்த ஆங்கிலேய அலுவலர் பெஞ்சமின் டோரின்க்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். காசிக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையிலான பாதையில், வழி நெடுகிலும் உள்ள சத்திரங்களைப் (தருமசாலைகள்) பிரித்து விடவேண்டாமென்று விண்ணப்பித்து, இந்தச் சத்திரங்கள், யாத்திரிகர்களுக்கும் பயணிகளுக்கும் வணிகர்களுக்கும் நாள்தோறும் மூன்று வேளை இலவச உணவு வழங்குவதையும், மருத்துவ வசதிகள் அளிப்பதையும் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இக்கடிதத்தை வாசிக்கும்போது, நம்முடைய

பண்பாட்டுத் தொடர்பைத் தெரிந்துகொள்கிறோம் என்பது மட்டுமில்லை; நம்முடைய பண்பாடு எவ்வாறு சிதைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்ணீரோடு உணர்கிறோம்.

தமிழகத்தின் மீதான காசியின் செல்வாக்கு அளப்பரியது. எப்போதெல்லாம் மத்திய ஆசியாவிலிருந்தும் மேற்கிலிருந்தும் படையெடுப்பு அச்சங்கள் ஏற்பட்டனவோ, அப்போதெல்லாம் தமிழகத்து அரசர்கள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் காசி விசுவநாதர் திருக்கோயில்களை எடுப்பித்துள்ளனர். தென்காசிப் பாண்டிய வம்சாவளியின் புகழ்மிக்க அரசரான பராக்கிரம பாண்டியர், வடநாட்டுக் காசியின் பிரதிபிம்பமாகத் திருக்கோயில் ஒன்றைக் கட்டுவித்து, இக்கோயில் தலத்தைத் தென்காசி என்றே அழைத்துள்ளார். தமிழக கிராமங்களில் ஏராளமான காசி விசுவநாதர் கோயில்கள் உள்ளன.

15ஆம் நூற்றாண்டின் மகான், காமரூபத்தைச் (இப்போதைய அஸ்ஸாம் பகுதிகள்) சேர்ந்த மகாபுருஷ்ர் சங்கர்தேவ், இராமேஸ்வரத்திலும் காஞ்சிபுரத்திலும் பயின்றார்; பின்னர், மேலும் பயில காசிக்குச் சென்றார். இந்தத் தலங்களில் பயின்ற பின்னர் காமரூபம் சென்ற அவர், பிரம்மபுத்திரா நதிப் படுகையில், சத்ரா என்றழைக்கப்படும் வைணவத் திருமடங்களைத் தோற்றுவித்தார். பாரத தேவியின் பெருமையைப் போற்றும் வகையில், ‘தன்ய தன்ய பாரத பூமி’ என்னும் கவிதையை இயற்றினார்.

தமிழ்நாட்டின் மயிலாடுதுறைப் பகுதியில் சீரோடு செயல்பட்டு வரும் சைவத் திருமடமான தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த

குமரகுருபர தேசிகர், 17ஆம் நூற்றாண்டில், தம்முடைய குருநாதரின் ஆணைப்படி காசியை அடைந்தார். கங்கைக் கரையில் கேதார் கட்டப் படித்துறைக்கு அருகே கேதாரேச்வரர் திருக்கோயிலைக் கட்டினார். குமரகுருபரரின் சீடர்கள், பாரதத்தின் தென்பகுதிப் புனித ஆறான காவிரியின் கரையில், தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கு அருகே, திருப்பனந்தாளில் காசி விசுவநாதர் கோயிலைக் கட்டினர்.

தமிழ்நாட்டின் மாநிலப் பாடலாக உள்ள தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இயற்றியவர் மனோன்மணியம் சுந்தரனார் என்று அறியப்பட்ட முனைவர் சுந்தரப் பெருமாள் பிள்ளை என்பதை நாம் அறிவோம். இவருடைய குருநாதரும், மனோன்மணியம் நாடகத்திலேயே ஆசான் என்னும் உயர்நிலையில் வைத்துப் போற்றப்பட்டவருமான கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள், தம்முடைய வாழ்வின் பெரும்பகுதியைக் காசியின் மணிகர்ணிகா படித்துறைப் பகுதியில் கழித்தார். சுவாமி விவேகானந்தருக்கு சைவ சித்தாந்தத்தைப் போதித்தவரான மனோன்மணியம் சுந்தரனார், காசியினால் நிரம்பவும் வசீகரிக்கப்பட்டிருந்தார்.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் புரட்சிக் கவிஞரும், பாரத தேவியின் ஆழ்பக்தருமான மகாகவி சுப்பிரமணிய பாரதியார், 19ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளிலும் கல்விக்காகக் காசியில் தங்கியிருந்தார். காசியின் அறிவுசார் மற்றும் ஆன்மீக மேன்மையினாலும் இத்தலத்தின் குதூகலத்தாலும் கவரப்பட்ட பாரதியார், வனப்புமிக்க கவிதை ஒன்றினால், காசி நகருக்கு

உணர்வுபூர்வ மரியாதை செலுத்தியுள்ளார். இன்றளவும், மகாகவியின் குடும்ப வழித்தோன்றல்கள், காசியில், அனுமன் கட்டத்திற்கு அருகில் வசிக்கின்றனர். மேலும், ஏராளமான தமிழ்க் குடும்பங்கள் இப்போதும் காசியில் வசிக்கின்றனர்.

காசியும் காஞ்சியும், வானியல் ஆய்வுகளின் முக்கிய மையங்களாகவும் திகழ்ந்துள்ளன. இவ்விரண்டு ஊர்களிலும் செயல்பட்ட வானியல் மையங்கள், தங்களுக்குள் தகவல்களையும் ஆய்வுகளையும் அவ்வப்போது பகிர்ந்து கொண்டதற்கான பதிவுகள் காணப்படுகின்றன. 1770 ஆண்டுக்கும் 1780 ஆண்டுக்கும் இடையில், இவ்விரண்டு ஊர்களுக்கும் ஆய்வு நிமித்தமாக வந்த பிரிட்டிஷ் வானியலாளர்களான பார்கர் (Barker), பியர்ஸ் (Pearse), கேம்ப்பெல் (Campbell), ஜான் ப்ளேஃபேர் (John Playfair) ஆகியோர், இவ்வூர்களில் இருந்த அறிஞர்களின் கணிதவியல் துல்லியம் மற்றும் வானியல் தகவல்கள் குறித்து அபரிமித வியப்பை வெளியிட்டுள்ளனர்.

காஞ்சிக்கும் காசிக்கும் நெடிய தொடர்பு இருந்துள்ளது. இவ்விரண்டு ஊர்களின் பட்டு நெசவு மற்றும் துணிகளின் வாயிலாகவும், இப்பொருட்களின் வணிகத்தின் வாயிலாகவும், இந்தத் தொடர்பு மேலும் வலுப்பட்டது. காஞ்சிப்பட்டும் சரி, காசி பனாரஸ் பட்டும் சரி, உலகப் புகழ் பெற்றவை. தமிழகத்திற்கும் காசிக்கும் இடையில் பன்முக, ஆழ்ந்த, ஏன், ஒருவகையில் தொப்புள்கொடி உறவே இருந்ததற்கும் (இருப்பதற்கும்) நிரம்ப ஆதாரங்கள் உள்ளன. காலனி ஆதிக்கத்தின்போது சிதைந்துபோன (சிதைக்கப்பட்ட) வளமைமிக்க வரலாறு, மீள் கண்டுபிடிப்புக்காகக் காத்திருக்கிறது.

காலனி ஆதிக்கத்தின்போது, தமிழகத்திற்கும் காசிக்குமான தொடர்பின் யாந்திரீகக் கட்டுமானங்கள் பிரிக்கப்பட்டுக் காணாமல் போய்விட்டன என்றாலும், மக்களின் மனங்களில் இத்தொடர்பின் உணர்வுபூர்வப் பிடிமானங்கள் துடிப்போடும் முனைப்போடும் இருந்துள்ளன; இன்னமும் இருக்கின்றன. பாரதம் குறித்த ஆழமான மற்றும் துல்லியமான புரிதலைக் கொண்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் தொலைநோக்கும் துணிவும் கொண்ட தலைமையின்கீழ், இந்த ஆண்டாண்டு காலத் தலைமுறைத் தொடர்பு மறுவாழ்வு பெறவுள்ளது. தமிழ் மொழிமீது நிரம்பக் காதலும் மரியாதையும் கொண்டுள்ள பாரதப் பிரதமர் அவர்கள், தமிழ் மொழி உயர் ஆய்வுகள் மற்றும் மேம்பாட்டுக்காக பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் சுப்பிரமணிய பாரதி இருக்கையையும் நிறுவியுள்ளார்கள். நவம்பர் மாத மையத்தில் தொடங்கி, காசிக்கும் தமிழகத்திற்குமான பண்டைய தொடர்புகளைக் கொண்டாடிப் புதுப்பிக்கும் வகையில், ஒரு மாத காலத்திற்கு நடைபெறவுள்ள காசி-தமிழ் சங்கமம் நிகழ்வுக்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி, அவர்கள் தந்திருக்கும் ஊக்கமும் ஆக்கமும், 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்பதில் அவருக்கிருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையையும் ஈடுபாட்டையுமே காட்டுகின்றன.

********************